ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

දේශීය මෙහෙයුම් කටයුතු දෙපාර්තමේන්තුව
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
Domestic Operations Department

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/16**

2020 ஏப்பிறல் 17

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்,**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்: நாளாந்த ஆகக்குறைந்த வைப்பு**

இலங்கை மத்திய வங்கியில் அனைத்து வர்த்தக வங்கிகளும் பேணப்படவேண்டிய குறைந்தளவு நாளாந்த வைப்பின் அடிப்படைகளில், திருத்தப்பட்டவாறான 2020 ஏப்பிறல் 12ஆம் திகதியிடப்பட்ட இல: 1805/39 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட **ஒழுங்குவிதி 'D'** இனால் மற்றும் திருத்தப்பட்டவாறான நாணயவிதிச்சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10C, 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அறிவித்தல் தொடர்பில் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. ஒழுங்குவிதி 'D' இன் 06ஆம் இலக்க ஒழுங்குவிதியின் தேவைகளுக்காக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, வர்த்தக வங்கிகளால் பேணப்படவேண்டிய ஆகக் குறைந்தளவு நாளாந்த வைப்புத் தேவைப்பாட்டினை ஏதாகிலும் ஒரு நாளுக்கு தேவைப்படும் ஒதுக்குகளின் **இருபது (20) சதவீதத்திற்கு** பேணப்படவேண்டும் என தீர்மானித்திருக்கின்றது.

3. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2020 ஏப்பிறல் 16ஆம் நாளிலிருந்து ஆரம்பமாகும் தற்போதைய ஒதுக்குப் பேணல் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது. காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/06 இல் உள்ள மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் பிரயோகத்தில் இருக்கும்.

**சீ ஏ அபேசிங்க**

**பணிப்பாளர்/ உள்நாட்டு தொழிற்பாடுகள்**

7 වන මහල, 2 වන කුළුණ
අංක 30, ජනාධිපති මාවත
තැ.පෙ. 590, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
+94 112 477036

தளம் 7, கோபுரம் 2
இல. 30, சனாதிபதி மாவத்தை
த.பெ 590, கொழும்பு 01, இலங்கை
+94 112 346287

Level 7, Tower 2
No. 30, Janadhipathi Mawata
P.O. Box 590, Colombo 01, Sri Lanka
ddod@cbsl.lk
www.cbsl.gov.lk